# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.No.105/2012 |
| Deposition of witness for Prosecution | : P.w. 5 /L.W.6 |
| Name | : மாரியப்பன் |
| Father Name/Husband Name | : ராமலிங்கம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 11.07.2025 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் கடலூர் துறைமுகத்தில் வசித்து அப்பள வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். பழனியப்பனிடம் நான் கடந்த 20.09.2007 ந் தேதி மாதம் ரூ.7000/- வீதம் ரூ.1,40,000/- சீட்டை 13 மாதங்கள் வரை கட்டிவந்தேன். நான் கட்டிய மொத்த தொகை ரூ.65,840/- ஆகும். எதிரி ஊரை விட்டு ஓடிவிட்டார். பின்னர் தான் நான் ஏமாந்த விவரம் தெரியவந்தது. அப்போது தான் என்னை போலவே மற்றொருவரும் சீட்டு கட்டி ஏமாந்த விவரம் தெரியவந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நீங்கள் சீட்டு கட்டியதாக சொல்லப்படும் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக என்றால் இல்லை. சீட்டு உறுப்பினராக சேர்வதற்கு ஏதாவது அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. சீட்டு கட்டுவதற்கு ரசீது அல்லது பாஸ்புக் உள்ளதா என்றால் இல்லை. சீட்டு சம்பந்தமாக ஏமாந்தது குறித்து புகார் ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் மாவட்ட

கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ளேன். சீட்டு பணம் கட்டியது ஏலமிட்டது 1 ம் எதிரியிடம் கொடுத்தீர்களா என்றால் சரிதான். இந்த சீட்டு எந்த அலுவலகத்தில் எந்த இடம் என்றால் வண்டிபாளையம் ரோட்டில் உள்ள காம்ப்ளக்ஸ் இந்த சீட்டில் நீங்கள் உறுப்பினராக சேரவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2025.07.11 06:27:55 -0500

நீதித்துறை நடுவர் எண்-2,

கடலூர்.

# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.No.105/2012 |
| Deposition of witness for Prosecution | : P.w. 6 /L.W.8 |
| Name | : குமார் |
| Father Name/Husband Name | : நாகப்பன் செட்டியார் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 11.07.2025 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் கடலூர் துறைமுகத்தில் வசித்து பக்தவத்சலம் மார்க்கெட்டில் மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். பழனியப்பன் தொழில் ரீதியாக நண்பர் ஆவார். அவரது மனோரஞ்சிம் மற்றும் அப்பர் மகன் சரவணன் கடந்த 8 வருடங்களாக பல்வேறு தேதிகளில் பல்வேறு வகையான தொகைகளில் மாதமாதம் பலரிடம் சீட்டு பிடித்து ஏலமிட்டு நம்பும் படியாக சீட்டு நடத்தி வந்தார். நான் கடந்த 2007 வருடம் ரூ.60,000/- சீட்டு ஒன்றில் 20 மாதங்கள் வீதம் மாதம் ரூ.3000/- வீதம் முழு சீட்டு கட்டி ஏலம் எடுத்ததில் வசூல் தொகை போக ரூ.55,000/- ஐ கேட்டபோது பழனியப்பன் வசூல் செய்து ஒருமாதத்தில் தருவதாக வாக்குறுதி கொடுத்தார். ஆனால் அவர் தலைமறைவாகிவிட்டார். அதனால் அவரிடம் சீட்டு கட்டிய 150 பேர் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். புகார் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நீங்கள் சீட்டு கட்டியதாக சொல்லப்படும் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சீட்டு உறுப்பினராக சேர்வதற்கு ஏதாவது அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் ஏதாவது உள்ளதா எதுவும் கொடுக்கவும் கேட்கவும் இல்லை. சீட்டு கட்டுவதற்கு ரசீது அல்லது பாஸ்புக் உள்ளதா என்றால் இல்லை. சீட்டு பணம் கட்டியது ஏலமிட்டது 1 ம் எதிரியிடம் கொடுத்தீர்களா என்றால் 1 ம் எதிரியிடம் தான் கொடுத்தேன். எதிரிகளின் மீது புகார் மற்றவர்களுடன் சேர்ந்து தான் நான் கொடுத்தேன். தனிப்பட்ட முறையில் புகார் ஏதும் நான் கொடுக்கவில்லை. இந்த சீட்டில்

நான் உறுப்பினராக சேரவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2025.07.11 06:28:20 -0500

நீதித்துறை நடுவர் எண்-2,

கடலூர்.